**R5284**

## DOCTRINES MORE OR LESS IMPORTANT

# உபதேசங்கள் ஏறக்குறைய முக்கியமானது

கிறிஸ்துவின் உபதேசங்களில் உறுதியான அம்சங்கள் இருக்கின்றன. அவை இன்றியமையாததும், அடிப்படையானதுமாக இருக்கின்றன. அது இல்லாமல் யாரும் கர்த்தருடைய சீஷர்களாக அங்கீகரிக்கப்படமாட்டார்கள். வேறு சில அம்சங்கள் இருக்கின்றன. அவை பயனுள்ளதாகவும், உதவிகரமானதாகவும், ஆசீர்வாதத்திற்குரியதாகவும் இருக்கின்றன. அவை அடிப்படையானவையல்ல, கிறிஸ்துவின் சரீர அங்கத்திற்கு அத்தியாவசியமானதும் அல்ல. அடிப்படையானவை பெந்தெகொஸ்தே நாளிலிருந்து இன்றைய காலம் வரை நல்ல, பரிசுத்தவான்களால் அனுபவிக்கப்பட்டு வருகிறது.

நாம் இப்பொழுது அதே வகுப்பாராக, அதே அடிப்படையானவைகளை பெற்றிருக்கிறோம். நாம் பலப்படுத்தப்படுவதற்காக மற்ற சலுகைகளும் சத்தியங்களும், "ஏற்ற காலம் போஜனமும்" அனுமதிக்கப் –பட்டிருக்கிறன. இந்த பின்னானவைகள் நாம் கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கங்களாவதற்கு அத்தியாவசியமானவைகள் அல்ல. இல்லையென்றால் நமது முற்பிதாக்கள் கிறிஸ்துவின் சரீர அங்கங்களாகியிருக்க முடியாது. அநேக நூற்றாண்டுகளாக கிறிஸ்துவின் சரீரமே இல்லாதிருந்திருக்கும்.

பாவ நிவாரணத்தின் அடிப்படை கோட்பாடு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1. ஆதாமுடைய பிள்ளைகளாகிய சகல மனிதர்களும் பாவிகள்.

2. ஒரு இரட்சகரின் பலியில்லாமல் யாரும் தேவனுடன் ஒப்புரவாக முடியாது.

3. அந்த பலியாக இருக்கும்படியும் பின்னர் அதை உலகத்தின் பாவங்களுக்காக மீட்கும் பொருளாக அப்பியாசப்படுத்தும்படியும் இயேசு உலகத்திற்கு வந்தார்.

4. இரட்சகரின் வேலையில் வைக்கும் விசுவாசத்தின் அடிப்படையில், "உங்கள் சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுங்கள்" என்கிற தெய்வீக அழைப்பை ஏற்றுக்கொண்டு, விசுவாசியானவன் தெய்வீக ஊழியத்துக்கு தன்னை அர்ப்பணம் பண்ணலாம்.

5. இப்படி செய்து, விசுவாசியானவன் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் தொகை நிறைவாகும் வரைக்கும். தனது பலி பிதாவானவருக்கு பிரியமாயிருக்கும்படி உறுதியான முழுமையான விசுவாசத்துடன் அப்பியாசப்படுத்த வேண்டும். பிறகு அவன் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் பங்கை, ஜெனிப்பித்தலின் பங்கை பெறுவான்.

6. இந்த நிபந்தனைகளை சந்திப்பவர்கள் சகோதரர்களாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இதுவே எப்பொழுமே தேவையானதாக தெரிகிறது. இதற்கு மேலானது எதுவும் தற்காலத்தில் அவசியமற்றதாக இருக்கிறது என்று நாம் விசுவாசிக்கிறோம். நமது சாதகமான நாளினிமித்தம், நாம் அதிக அறிவை பெற்றிருக்கிறோம். நமது அதிகமாக அறிவை ஈடுகட்டும்படியாக அதற்கேற்றாற் போல சோதனைகளையும் பெறுவோம்.

எல்லா இடங்களிலும் இருக்கிற கர்த்தருடைய பிரியமான ஜனங்களுக்கு நாங்கள் கூறும் புத்திமதி என்னவென்றால், மேலே குறிப்பிடப்பட்டிருக்கிற அடிப்படையானவைகளுக்கு மேலாக ஒருவர் மேல் ஒருவர் அதிக சுமைகளை வைக்க வேண்டாம். அப்பொழுது தான் அவர்கள் இலகுவாய் நிற்பார்கள். ஒருவருக்கொருவர் இலகுவாக இருக்க விடுவார்கள். தங்களால் இயன்ற அளவுக்கு ஒருவருக்கொருவர் அந்நியோந்நியத்திலும் ஒத்திசையிலும் இருப்பார்கள்.

இந்த அடிப்படைச் சத்தியங்களைக் காட்டிலும் இன்னும் அதிகமாக கூட்ட விருப்பங்கொண்டால், இரு பிரிவினரும் முன்னேறுவதற்கு பிரிவினை தான் அவசியம் என்று கருதினால் பிறகு சந்தேகத்திற்கிடமில்லாமல் பிரிவே சரியான மார்க்கமாக இருக்கும்.

நாங்கள் யாருடைய கருத்துக்களையும் விமர்சிக்கவில்லை. வேதாகமம் போதிப்பதாக தாங்கள் விசுவாசிப்பதை பிடித்துக்கொள்ள முழு உரிமை இருக்கிறது. நம்முடைய பார்வை நமது வாசகர்கள் அனைவரும் அறிந்ததே. அவைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. ஆதாம் ஒருவர் பாவம் செய்ததினால் அதில் அவரும் அவருடைய சந்ததியினரும் ஈடுபட்டிருக்கிறார்கள்.

2. ஒரு இரட்சகர் தேவையாய் இருந்து, இயேசுவே அந்த இரட்சகராகி, "தம்மை எல்லாருக்காகவும் மீட்கும் பொருளாக கொடுத்தார்."

3. தேவன் மீட்கப்பட்ட பாவிகளில் சிலரை அழைத்திருக்கிறார். மீட்கும் பொருளாக இருக்கும்படி அல்ல, யாரையும் மீட்பதற்காகவும் அல்ல, ஆனால் இரட்சகரோடு ஐக்கியமாகும்படியாக அவரது சரீரத்தின் அங்கங்களாகும்படியாக, அவரது மணவாட்டியாக அழைத்திருக்கிறார்.

4. இவர்கள் ஐக்கியமுள்ளவர்களாயிருப்பதற்கான நிபந்தனைகளும் விதிமுறைகளுமாவன: இயேசு அவர்களது மாபெரும் பரிகாரியாக, அவர்களை தமது அங்கங்களாக, அவர்களது மாம்சத்தை தமது மாம்சமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆதாமின் சந்ததியின் அங்கங்களாக அவர்களுக்கு வரக்கூடிய அவரது புண்ணியத்தை அவர்களுக்கு சாட்ட வேண்டும். பிறகு அவர்கள் பரம்பரையாக பெற்றிருக்கிற பலவீனங்கள், குறைபாடுகள், அபூரணங்கள் ஆகியவற்றிலிருந்து நீதிமான்களாக்கப்படுகிறார்கள். அவர்களது சொந்த சித்தங்கள், அவர்களது சக்திகள் மற்றும் திறமைகள் அனைத்தும் அர்ப்பணிக்கப்பட்டு, மகா பிரதான ஆசாரியரின் பாவ நிவாரண பலியின் ஒரு பங்காக அவர்களது பலி தேவனுக்கு பிரியமானதாக இருக்கும்படி செய்யப்படுகிறது.

5. இப்படியாக இரட்சகரின் பலியில் பங்கு பெற்று, முதலாம் உயிர்த்தெழுதலின் மூலம் அவரது ஜீவனில் பங்குபெறும் சலுகையை இவர்கள் பெறுகிறார்கள். இரட்சகர் புதிதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, சேர்க்கப்பட்ட அங்கங்களை விடுத்து, உலகிற்கு தமது பலியின் புண்ணியத்தை இப்பொழுது கொடுக்கிறதில்லை. அவர் தெய்வீக திட்டங்களை நிறைவேற்றுவார். யுக முடிவில் அவரது அங்கங்கள் அனைவரையும் ஆஜர்படுத்துமுன் பலியிடுவார். அவரது பலியின் புண்ணியத்தை முழு உலக பாவங்களுக்காகவும் கொடுத்து, இதன்மூலம் அவர்களுக்காக புதிய உடன்படிக்கையை முத்திரையிடுவார்.

அநேகர் சபையின் பலிக்கு அதிக மதிப்பு கொடுத்து, தவறிழைக்கிறார்கள் என்று நாங்கள் கருதுகிறோம். ஆனால் மற்ற சகோதரர்கள் சபையின் பலியில் எந்த மதிப்பையும் காணாதபடி, சபையானது ஆண்டவரின் பலியில் பங்குபெறுவதே இல்லை என்று கூறி தவறு செய்கிறார்கள். இது நமக்கு ஒரு கடிகாரத்தின் பெண்டுலம் மூலம் ஒரு முனையிலிருந்து அடுத்த முனைக்கு செல்வதைப் போல் காணப்படுகிறது. ஆனால் நமது கருத்தோ நடுவில் இருக்கிறது. இந்த காரியத்தை நமது அநேக வெளியீடுகளில் குறிப்பிட்டு இருக்கிறோம்.

இந்த காரியங்களை முழுவதுமாக கவனித்த பிறகு, ஒரு வகுப்பானது இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று காண்கிறது. இரண்டு வகுப்புகளாக முன்னேறுகிறது. அது ஞானமான ஒன்றாக முடிவு செய்வதில் நாம் ஒத்துப்போகிறோம். ஒரு பிரிவினையின் அவசியத்திற்காக மிகவும் வருந்துகிறோம். இப்படிப்பட்ட பிரிவினை இதில் எந்த வகுப்பையும் சமூகத்திலிருந்தோ கர்த்தரின் பிள்ளைகளிடத்திலிருந்தோ பிரிவினை செய்து கொள்ள அவசியமாயிராது. ஏனெனில் இரு வகுப்பினரும் இயேசுவை இரட்சகராகவும் அவரது இரத்தம் பிரதானமாக பலனளிக்கக் கூடியதாக இருப்பதாகவும் அங்கீகரிக்கிறார்கள்.